**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 18/2020** **Date:20.02.2026.**

**(DW1)- ராதா**

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. வழக்கு பட்டிகை சொத்தை பற்றி தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சர்வே எண் சொத்தானது, 1999 வருடம், சுகுமாரன், ரவி என்ற ரவிராஜ் மற்றும் தங்கப்பன் முவரும் சேர்ந்து கிரயம் பெற்ற 7.5 செண்ட் சொத்து என்றால் சரிதான். மேற்படி கிரயம் பெற்ற நபர்கள் இளையபெருமாளின் குழந்தைகள் என்றால் சரிதான். மேற்படி மூவரும் சொத்தை கிரயம் பெற்று தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சுகுமாரன் என்பவர் எனது முதல் கணவர் என்றால் சரிதான். அவர் 07.11.2005 வருடம் காலமானார் என்றால் சரிதான். அவர் இறப்பிற்கு பின்பு அவருடைய 2.5 செண்ட் சொத்தை நான் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரிதான்.

2. நான் சுகுமாரனின் தம்பி உடன் சேர்ந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் திருமணம் செய்து வாழ்ந்து வருகிறேன். எனக்கும் தங்கப்பன் என்பவருக்கும் குழந்தை பிறந்த பின்புதான் திருமணத்தை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. எனது திருமணத்தை நான் எப்போது பதிவு செய்தேன் என்றால் தற்போது நினைவில் இல்லை. எனது திருமண பதிவு சான்றிதழில் நாங்கள் சேர்ந்து வாழ்ந்து வருவதாக தான் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரியல்ல, நாங்கள் திருமணம் செய்துள்ளோம். தங்கப்பனின் 2.5 செண்ட் சொத்தை தற்போது நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல, மொத்த 7.5 செண்ட் சொத்தையும் நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம்.

3. ரவி என்ற ரவிராஜ் 14.06.2009 அன்று மாரடைப்பு காரணமாக இறந்துவிட்டார் என்றால் சரிதான். ரவி ராஜ்ன் இறப்பிற்கு பின்பு அவரது 2.5 செண்ட் சொத்தை சாந்தி

என்ற மேரி சாந்தி என்பவர் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல, அவருக்கும் சொத்திற்கும் சம்பந்தமில்லை. 2005 – 2009 காலகட்டத்திலான எனது குடும்ப அட்டையில் தங்கபனின் பெயர் உள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் குடும்ப அட்டையில் காணப்படும் புகைப்படம் தங்கப்பன் உடையது என்றால் சரியல்ல, அவர் பெயரில் நான் எப்போதும் குடும்ப அட்டை பெற்றது இல்லை.

4. ரவி என்ற ரவிராஜ்ற்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். ரவி ராஜ் இறப்பிற்கு பின்பு அவருக்கு உரிமைப்பட்ட 2.5 செண்ட் சொத்தை அவரது மனைவி சாந்தி என்பவர் இக்ணேசியஸ் ராஜ் என்பவருக்கு கிரயம் கொடுத்தார் என்றால் சரியல்ல, அது ரவி ராஜால் தங்கப்பனுக்கு கொடுக்கப்பட்ட சொத்தாகும். இக்ணேசியஸ் ராஜ் இறந்து விட்டார் என்றால் சரிதான். அவரது இறப்பிற்கு பின்பு அவரது வாரிசுகள் இந்த வழக்கின் வாதிக்கு அவருக்கு பாத்தியப்பட்ட 2.5 செண்ட் சொத்தை கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

5. நான் தாக்கல் செய்துள்ள பட்டாவில் வாதியின் பெயர் உள்ளது என்றால் சரியல்ல, அது போலியாக சேர்க்கப்பட்டது ஆகும். தாவா சொத்திற்கு தற்போது வாதி பட்டா பெற்று கைவச அனுபவதில் வைத்திருகிறார் என்றால் சரியல்ல. வாதி எத்தனை செண்ட் சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 7.5 செண்ட் சொத்தில் தாக்கல் செய்துள்ளார். நான் இந்த வழக்கில் ஏதேனும் பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். நான் எத்தனை செண்ட் சொத்திற்கு பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் 7.5 செண்ட் சொத்திற்கு பரிகாரம் கேட்டுள்ளேன்.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**